பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**15 02 2026** **7 15**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. டெல்லி, ஹரியானா, மகாராஷ்டிரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள புதிய ரயில் பாதை திட்டங்கள் சரக்குப் போக்குவரத்தை மேம்படுத்தும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாட்டின் முதல் டிஜிட்டல் கரன்சி அடிப்படையிலான பொது விநியோகத் திட்டத்தை மத்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று காந்திநகரில் தொடங்கி வைக்கிறார்.

3. வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர், ஜெர்மனி வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Johann Wadephul**-ஐ சந்தித்துப்பேசினார்.

4. நைஜீரியாவில் ஆயுதம் ஏந்திய கும்பல் **3** கிராமங்களில் நடத்திய தாக்குதல்களில் **32** பேர் கொல்லப்பட்டனர்.

5. இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் தொடர் இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

டெல்லி, ஹரியானா, மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களின் பல்வேறு மாவட்டங்களை உள்ளடக்கிய மூன்று கூடுதல் ரயில் பாதை திட்டங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டங்கள் இரயில்வே உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதுடன், சரக்கு போக்குவரத்துச் செலவைக் குறைக்கும் என்றும், இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்றும் அவர் சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஹைதராபாத் - பனாஜி பொருளாதார வழித்தடத்தில் உள்ள குடபெல்லூர் முதல் மகபூப்நகர் வரையிலான தேசிய நெடுஞ்சாலை-167ஐ அகலப்படுத்தும் முடிவையும் பிரதமர் வரவேற்றுள்ளார்.

இந்த நடவடிக்கை பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதோடு, வேலைவாய்ப்புகளை உருவாக்கி, மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் என திரு. மோடி கூறியுள்ளார்.

கோபூர் மற்றும் நுமலிகார் இடையே 4 வழிச்சாலை கொண்ட பசுமைவழிப் பாதையை அமைக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாகப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதில் பிரம்மபுத்திரா ஆற்றின் அடியில் இந்தியாவின் முதல் நீருக்கடியிலான சாலை மற்றும் ரயில் சுரங்கப்பாதை அமைய உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த உருமாற்றத் திட்டம் அஸ்ஸாம் மற்றும் ஒட்டுமொத்த வடகிழக்கு மாநிலங்களின் இணைப்பை மேம்படுத்தி, போக்குவரத்துச் செலவைக் குறைப்பதோடு, வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கிப் பிராந்திய வளர்ச்சியை விரைவுபடுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும், நொய்டா செக்டார் **142** முதல் பொட்டானிக்கல் கார்டன் வரை மெட்ரோ ரயில் விரிவாக்கத் திட்டத்திற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது நொய்டாவின் வளர்ச்சிப் பயணத்திற்குப் புதிய வேகத்தைக் கொடுக்கும் என்றும், போக்குவரத்து நெரிசலை கணிசமாகக் குறைக்கும் என்றும் திரு. மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் முதல் டிஜிட்டல் கரன்சி அடிப்படையிலான பொது விநியோகத் திட்டத்தை மத்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று காந்திநகரில் தொடங்கி வைக்கிறார்.

குஜராத் அரசால் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த முயற்சி, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் உணவு தானியங்கள் வெளிப்படைத் தன்மையுடன் விநியோகிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதன் மூலம், பொது விநியோகத் திட்டத்திற்காக ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட டிஜிட்டல் டோக்கன்களைப் பயன்படுத்தும் நாட்டின் முதல் மாநிலமாக குஜராத் உருவெடுத்துள்ளது.

இந்த முன்னோடித் திட்டத்தின் கீழ், அகமதாபாத், சூரத், ஆனந்த் மற்றும் வல்சாட் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 26 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் டோக்கன்களைப் பெறுவார்கள்.

<<<<>>>>

மியூனிக் பாதுகாப்பு மாநாட்டின் ஒரு பகுதியாக, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் நேற்று ஜெர்மனி வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Johann Wadephul**-ஐ சந்தித்துப்பேசினார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. ஜெய்சங்கர், இந்தச் சந்திப்பின் போது பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பின் முன்னேற்றம் குறித்து

ஆய்வு செய்ததாகவும், பிராந்திய அளவிலான முக்கியப் பிரச்சனைகள் குறித்து விவாதித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து, கனடா நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் திருமதி. அனிதா ஆனந்தை சந்தித்த டாக்டர் ஜெய்சங்கர், இந்தியா-கனடா இடையிலான உறவுகள் சீரான முன்னேற்றத்தைக் கண்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், செக் குடியரசின் துணைப் பிரதமரும் வெளியுறவுத்துறை அமைச்சருமான திரு. பீட்டர் ஃபியாலாவையும் சந்தித்த திரு. ஜெய்சங்கர், இரு நாடுகளுக்கும் இடையே பொருளாதாரம் மற்றும் பாதுகாப்புத் துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விரிவாக விவாதித்தார்.

<<<<>>>>

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், ஜெர்மனியின் மியூனிக் நகரில் நேற்று அந்நாட்டின் பவேரியா மாகாணத்தின் அமைச்சர் திரு. எரிக் பீஸ்வெங்கரை சந்தித்துப் பேசினார்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் ஜெர்மனி அதிபர் இந்தியாவுக்கு மேற்கொண்ட சமீபத்திய பயணத்தின் தொடர்ச்சியாக, இரு நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து மேம்பட்டு வரும் ஆழமான **ஒத்துழைப்பு** குறித்து இரு தலைவர்களும் விவாதித்ததாக சமூக வலைதளத்தில் மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் முடிவடைந்த இந்தியா-ஐரோப்பா இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்தும் அவர்கள் ஆலோசித்தனர்.

பசுமை மற்றும் நிலையான **ஒத்துழைப்பு** ஒப்பந்தம் மூலம் காலநிலை நிதி பெறுவதற்கான வழிகள் மற்றும் இரு நாடுகளிலும் மறுசுழற்சி தொழில்துறைகளில் கடைபிடிக்கப்படும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வது குறித்தும் இந்தச் சந்திப்பில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

நாடு முழுவதும் இன்று மகாசிவராத்திரி மிகுந்த பக்திபெருக்குடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

சிவபெருமானின் பக்தர்களுக்கு மிகவும் புனிதமான நிகழ்வுகளில் ஒன்றாகக் கருதப்படும் இந்நாளில், பக்தர்கள் விரதமிருந்து, சிறப்புப் பிரார்த்தனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நாடு முழுவதிலும் உள்ள சிவன் கோவில்களில் இரவு முழுவதும் நடைபெறும் சிறப்பு வழிபாடுகளில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்க உள்ளனர்.

இந்நாளையொட்டி ஆயிரக்கணக்கான பக்தர்கள் புனிதத் தலங்களில் நீராடி வருகின்றனர்.

தமிழகத்தின் கோயம்புத்தூரில் இன்று நடைபெற உள்ள மகாசிவராத்திரி விழாவில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கிறார்.

அவருடன் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மற்றும் மகாராஷ்டிரா முதல்வர் திரு. தேவேந்திர பட்னாவிஸ் உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொள்கின்றனர்.

இதையொட்டி அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

கேரள மாநிலத்தின் இறுதி வாக்காளர் பட்டியல் வரும் **21**-ஆம் தேதி வெளியிடப்படும் என்று மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ரத்தன் யு. கேல்கர் தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தின் வரைவு வாக்காளர் பட்டியலில் சர்ச்சைக்குரிய **36** லட்சத்து **88** ஆயிரத்தி **948** வாக்காளர்களின் பதிவுகளுக்கான **100** சதவீத விசாரணைகள் முடிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்தச் சிறப்புச் சரிபார்ப்பு நடவடிக்கையின் முக்கிய நோக்கம், நோட்டீஸ் வழங்கப்பட்ட அனைவருக்கும் முறையான விசாரணை நடத்தப்படுவதை உறுதி செய்வது என்றும், ஒரு வாக்காளருக்குக் கூட

அவரது வாக்குரிமை மறுக்கப்படக் கூடாது என்பதில் உறுதியாக இருப்பதாகவும் திரு. கேல்கர் மேலும் கூறினார்.

<<<<>>>>

மும்பை **Mulund** பகுதியில், மெட்ரோ வழித்தடம் **4**-இல் நேற்று நடைபெற்ற விபத்தைத் தொடர்ந்து, நிர்வாகப் பொறியாளர் திரு. சத்யஜித் சால்வேவை உடனடியாகப் பணியிடை நீக்கம் செய்ய மகாராஷ்டிர மாநில துணை முதல்வர் திரு. ஏக்நாத் ஷிண்டே உத்தரவிட்டுள்ளார்.

இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார் மற்றும் மூவர் காயமடைந்தனர்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்குத் தனது இரங்கலைத் தெரிவித்துள்ள திரு. ஷிண்டே, காயமடைந்தவர்களின் மருத்துவச் செலவுகளை மும்பை பெருநகர பிராந்திய மேம்பாட்டு ஆணையம் ஏற்கும் என்று தெரிவித்தார்.

மெட்ரோ ரயில் திட்ட கட்டுமானத்தின் போது பாலம் சரிந்து விழுந்தது குறித்து உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில், பொறுப்பற்ற முறையில் செயல்பட்டதற்காக ஒப்பந்த நிறுவனத்திற்கு **5** கோடி ரூபாய் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவின் வடமத்தியப் பகுதியில் நேற்று மூன்று கிராமங்களைக் குறிவைத்து ஆயுதம் ஏந்திய கும்பல் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது **32** பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நைஜர் மாநிலத்தின் **Borgu** பகுதியில் உள்ள துங்கா-மேகேரி, கொன்கோசோ மற்றும் பிசா ஆகிய இடங்களை இலக்காகக் கொண்டு இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

அந்நாட்டின் வடக்குப் பகுதியில் மத அடிப்படைவாத தீவிரவாதிகள் மற்றும் கடத்தல் கும்பல்களால் தொடர்ந்து பாதுகாப்பாற்ற நிலை தொடர்கிறது.

சில வாரங்களுக்கு முன்பு குவாரா என்ற இடத்தில் **162** பேர் கொல்லப்பட்ட நிலையில், தற்போது இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

<<<<>>>>

பங்களாதேஷ் பொதுத் தேர்தலில் பங்களாதேஷ் தேசிய கட்சி அமோக வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, புதிதாகத்

தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரும் செவ்வாய்க்கிழமை பதவியேற்க உள்ளனர்.

இதன் பிறகு பங்காதேஷ் தேசிய கட்சியின் நாடாளுமன்ற கட்சித்தலைவரை தேர்ந்தெடுக்கும் கூட்டம் நடைபெறவுள்ளது.

பின்னர் புதிய தலைவர் அந்நாட்டின் ஜனாதிபதியை சந்தித்து முறைப்படி ஆட்சி அமைக்க உரிமை கோருவார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் பதவியேற்பு விழாவிற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருவதாகவும், சுமார் 1,000 விருந்தினர்கள் இதில் பங்கேற்பார்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் தொடர் இன்று தொடங்குகிறது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் ஆட்டம் பிற்பகல் மணி 1.45க்கு சிட்னியில் தொடங்குகிறது.

இந்த ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற உள்ள மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு

முன்னதாக நடைபெறும் இந்தப் போட்டி இந்திய அணிக்கு நல்ல பயிற்சி களமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

--------------

உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி கொழும்புவில் இரவு மணிக்கு தொடங்க உள்ளது.

-------------

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா இன்று அர்ஜென்டினாவை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி இன்றிரவு மணி 7.30க்கு ரூர்கேலாவில் தொடங்குகிறது.

முன்னதாக நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெல்ஜியம் 4-2 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

-------------

சென்னை சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஹர்மீத் தேசாய் - யஷஸ்வினி கோர்படே இணை இறுதியாட்டத்தில் இன்று ருமேனியாவின் **Edward - Bernadette** இணையை எதிர்கொள்கிறது.

-------------

**ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் மோகன் பகான் அணி 2-0 என்ற கோல் கணக்கில் கேரள அணியை வென்றது.**

**கோவா - காசி அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.**

**<<<<The End>>>>**